For Private Circulation only

DHAYA MINISTRIES

# ரேமா

## செய்திமடல்



"அவன் நுகத்தை
உன் கழுத்தின்மேல்
இராதபடிக்கு
உடைத்து,
உன் கட்டுகளை
அறுப்பேன்
என்று சேனைகளின்
கர்த்தர்
சொல்லுகிறார்;
அந்நியர் இனி
அவனை
அடிமை
கொள்வதில்லை"
- எரேமியா 30:8.

மலர் 11 அக்டோபர் - டிசம்பர்'2019 இதழ் 10 - 12

DHAYA MINISTRIES & CHARITABLE TRUST
T8/510, Sagar Lake View Homes, Ayodhya Bye Pass Road,
Piplani Post, Bhopal (M.P.) - 462 022
Post Box No. 01
Cell No: 09893141410, 09840517559, 08871452038
E.mail : info@dhayaministries.com, Website : www.dhayaministries.com

## ஆசிரியர் கடிதம்.......



நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதங்களில் பல இடங்களுக்கு சென்று ஊழியம் செய்ய தேவன் கிருபைப்பாராட்டினார். வாய்ப்புக்கொடுத்த அனைத்து போதகர்கள் மற்றும் உறுதுணையாய் இருந்தவர்களுக்கு நனறி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். வாய்ப்புக்கொடுத்த அனைவரும் இதற்குரிய பலனை பெற்றுக்கொள்ள தேவன் தாமே உதவிச் செய்வாராக!

தூத்துக்குடி மாவட்டங்களில் தேவன் எங்களை அழைத்து சென்று பல பகுதிகளில் எடுத்து பயன்படுத்தினார். இதற்கு காரணராயிருந்த அருமையான அருட்திரு. ஞானசிங் அய்யா, அருட்திரு. செல்வன் மகா ராஜா அய்யா, மற்றும் சகோ. கருணாகரன் அண்ணனுக்கும், மிகுந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். தூத்துக்குடியிலிருந்த நாட்களில் தேவனுடைய கிருபையினால் பல திருச்சபை மக்களுக்கும் மற்றும் விடுதி பிள்ளைகளுக்கும் தேவன் எங்களை பிரயோஜனப்படுத்தினார். எங்களை அன்புடன் உபசரித்த அனைத்து தேவனுடைய பிள்ளைகளுக்கும் தேவன் பெரியக்காரியங்களை செய்வாராக!

அற்புத பெந்தெகொஸ்தே தேவ சபையில் ஒரு நாள் குடும்ப கூடுகையில் தேவன் பெரியக்காரியங்களைச் செய்தார். வட மாநிலங்களிலும் தேவன் பல சபைகளுக்கு கொண்டு சென்று பயன்படுத்தினார். அநேகர் தேவனிடத்திற்கு திரும்ப, கட்டுகளிலிருந்து விடுதலைப்பெற தேவன் கிருபைப்பாராட்டினார் தேவனுக்கே சகல துதியும், கனமும் மகிமையும் உண்டாவதாக!

பிரியமானவர்களே! நமது தேவன் நுகங்களை முறிக்கிற தேவன். நுகம் என்றால் உழுகின்ற மாட்டின் கழுத்தில் மரத்தால் செய்யப்பட்ட ஒரு பாரமான மரத்தை வைப்பார்கள் அந்த பாரம் அதின் மேல் இருக்கும் வரை அந்த மாட்டால் விடுதலையோடு ஒன்றும் செய்ய முடியாது... அவ்விதமான நுகத்தை மனிதர்கள் கழுத்தில் வைத்தால் என்ன செய்ய முடியும்.... சிலர் இவ்விதமான நுகத்தை சுமந்துக் கொண்டிருப்பதினால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை... ஆனால் நமது தேவன் “அவன் நுகத்தை உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன்” என்று வாக்குக்கொடுக்கிறார்.... நுகம் எப்பொழுதும் அடிமைக்கு தான் வைக்கப்படும்... அந்த அடிமையானவன் நுகத்தை சுமக்க முடியாமல் திண்டாடுவான்...

நுகம் மற்றும் கட்டுகள் என்பது ஒரு வேளை கடன், வியாதி, பெலவீனம், சோர்வு, போராட்டம், திண்டாட்டம், சமாதானமின்மை, பாவ வாழ்க்கை, சாபம் போன்றவைகளாகும். இவ்விதமான கட்டுகளிலிருந்து தேவன் உங்களை விடுவித்து நீங்கள் எதற்கும் எந்த பிசாசின் கிரியைகளுக்கும், மனிதனுக்கும் அடிமையாயிராதபடிக்கு உங்களை விடுதலைச் செய்வேன் என்று தேவன் வாக்கு அளிக்கிறார். அந்நியர் இனி அவனை அடிமைக் கொள்வதில்லை.... என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்.


நமது தேசத்தில் இன்னும் கணக்கற்றவர்கள் நுகத்தை சுமந்து, கட்டப்பட்டவர்களாய் அடிமைத்தனத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நுகம் முறிக்கப்பட்டு, கட்டுகள் அறுக்கப்பட்டு அடிமைதனத்திலிருந்து விடுதலையாக்கப்பட நம்மனைவருக்குமே பங்குண்டு....

நமது பங்குகளை உணர்ந்து செயல்படுவோம். “நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்”

கர்த்தர் தாமே உங்களுடைய நுகங்களை உடைத்து, கட்டுகளை அறுத்து, நீங்களும் மற்றவர்களை விடுவிக்க காரணமாய் இருக்க உங்களை ஆசீர்வதிப்பாராக!ஆமென்.

**கிறிஸ்துவின் பணியில் சகோதரி**
**ஜோஸ்பின் டேனியல்**

சிறப்புச் செய்தி



# வாழ்க்கையை குறித்து கனவு (தரிசனம்)



சகோ. ஆல்ஃப்ரட் டேனியல்

வாழ்க்கை மிகவும் முக்கியமானது. அதை தேவன் தந்துள்ளார். சிருஷ்டி கர்த்தர் அண்ட சராசரங்களை தன்னுடைய வார்த்தையினாலேயே சிருஷ்டித்து, மனிதனை தன் சாயலின்படியேயும், ரூபத்தின்படியேயும் உருவாக்கினார். தேவனிடத்தில் ஜீவன் இருந்தது. அவர் அவர்களை ஜீவாத்துமாவாக உருவாக்கினார். ஜீவனை நீங்கள் உருவாக்கவில்லை. தாய் தகப்பனை நீங்கள் தெரிந்துக் கொள்ளவில்லை. எந்த ஸ்தலத்தில் இருக்க வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என்று நீங்கள் தெரிந்துக் கொள்வதில்லை. அதனையும் தேவன்தான் உங்களுக்காக நியமிக்கிறார். உங்கள் சரீரமும் உங்களுடையதல்ல. “சகலத்தையும் தேவனே நியமித்திருக்கிறார். அதினாலே உங்களுடைய ஜீவனுக்கும், சரீரத்திற்கும் நீங்கள் அதிபதியல்ல. இதனை மனதில் வைத்து ஜீவிக்க வேண்டும். நீங்கள் உங்கள் ஜீவனையும் சரீரத்தையும் உருவாக்க முடியாது” அதனை அழிக்க உங்களுக்கு அதிகாரமும் இல்லை. இதனை சிந்தித்து செயல்படுங்கள். இதனை அழிப்பதற்கும் உருவாக்குவதற்கும்; இதை உருவாக்கின தேவனுக்கே அதிகாரம் உண்டு. ஆதலால் அவருக்கே பயப்படுங்கள் (லூக் 12:5).

வாழ்க்கை சரியாக வாழ்வதற்கு உங்களிடத்தில் தரிசனமும், கனவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் சரியாக செயல்பட முடியும். உங்கள் வாழ்க்கையை குறித்து கனவும், தரிசனமும் இல்லாவிட்டால், இலக்கும் நோக்கமும் இல்லாமல் செயல்படுவீர்கள் மற்றும் விரக்தியிலும் சென்று விடுவீர்கள். “தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான்” (நீதி 27:8). இலக்கு இல்லாமல் அம்பு எய்கிறவன் காற்றில் அம்பு எய்கிறவனாவான். உங்களுடைய வாழ்க்கையைக் குறித்து தரிசனம் இல்லாவிட்டால், தேவனிடத்தில் கேளுங்கள். இயேசு கூறினார்: “கேளுங்கள் கொடுக்கப்படும்..., கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்” (மத் 7: 7,8). நீங்கள் உங்களுடைய தேவைகளை தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்கிறீர்கள். ஆனால், உங்கள் வாழ்க்கையை குறித்து தரிசனத்தையும், நோக்கத்தையும் கேட்டிருக்கிறீர்களா? இல்லையென்றால் தேவனிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள்.

தேவன் ஒவ்வொருவரையும் விசேஷித்த நோக்கத்திற்காகவே உருவாக்கியிருக்கிறார். எந்த நோக்கத்திற்காக தேவன் உங்களை உருவாக்கி இருக்கிறாரோ ; அந்த நோக்கத்தை வெளிப்படுத்துவது தேவனுடைய காரியமாக காணப்படுகிறது. உங்களுக்கு, உங்கள் வாழ்க்கை, குடும்பம், பிள்ளைகள், கடமை, ஊழியம், ஆத்துமாக்கள், தேசம் இவைகளை குறித்து கரிசனையும், தரிசனமும் இருக்க வேண்டும். இந்த தரிசனத்தையும், சொப்பனத்தையும் தேவன் தான் தரமுடியும். தரிசனமும், சொப்பனமும் கிடைக்காத வரையிலும், உங்களுக்கு அதனைக் குறித்து பாரம் இருக்காது. பாரம் இல்லாவிட்டால் நீங்கள் செயல்பட முடியாது. இன்றைக்கு அநேகர் தன்னுடைய பொறுப்பு அறியாமல் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதினால்; அவர்களுடைய குடும்பத்திலும், ஊழியங்களிலும் முன்னேற்றமேயில்லை.

தரிசனமும், சொப்பனமும் உங்களை இலக்கிற்கு நேராக கடந்து செல்ல உற்சாகப் படுத்துகிறது. பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளைகளை குறித்து தரிசனமும் சொப்பனமும் இருக்க வேண்டும் அப்பொழுதுதான் நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்கமுடியும். பிள்ளைகள் தங்கள் தரிசனத்தை அடைய, உங்கள் பிள்ளைகளுக்காக நீங்கள் ஜெபிக்க வேண்டும். அவர்கள் தங்கள் தரிசனத்தையும், சொப்பனத்தையும் அடைய பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு உதவியாக இருங்கள். தன்னுடைய பிள்ளைகள் சமுதாயம், தேசம், சபைக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டுமென்று ஜாண் வெஸ்லி - ன் தாயார் சூசன்னா வெஸ்லி தன் பிள்ளைகளுக்காக தொடர்ந்து ஜெபித்து வந்தார்கள்.

அவர்களின் வழி நடத்துதலினாலும், அயராமல் ஜெபத்தினாலும் பிள்ளைகள் சபை, சமுதாயம் மற்றும் தேசத்திற்கும் ஆசீர்வாதமாக மாறினார்கள். ஜாண் வெஸ்லி மெத்தடிஸ்ட் சபையை நிருவினவர். அநேக சபைகளின் எழுப்பதலுக்கு காரணராய் மாறினார். இன்றைக்கு மெத்தடிஸ்ட் திருச்சபை உலகம் எங்கும் பரவியிருக்கிறது. அதற்குரிய கனம் அவர்களுடைய அம்மாவிற்குதான் சேரும். இவ்விதமாக நீங்களும் உங்கள் பிள்ளைகளை உற்சாகத்துடன் ஜெபத்துடனும் வழி நடத்துவீர்கள் என்றால் உங்கள் பிள்ளைகளும் சமுதாயம், தேசம், சபைக்கு ஆசீர்வாதமாக மாறுவார்கள்.

தரிசனம் மற்றும் சொப்பனத்தைக் கண்டு செயல்படுகிறவர்களுக்கு அநேக போராட்டம் நேரிடும். அந்த போராட்டத்தைக் கண்டு உங்கள் மனம் தளர்ந்து போகக்கூடாது. ஒருவருடைய வாழ்க்கையில் தரிசனமும் சொப்பனமும் இல்லாவிட்டால் அவர்களுக்கு எந்த தடையும் வராது. அவர்களுடைய வாழ்க்கையில் எந்த போராட்டமும் நேரிடுவதில்லை. ஏனெனில், தரிசனத்தையும் சொப்பனத்தையும் கொடுத்த தேவன் உங்களோடேயிருக்கிறார். “நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உனைக் கைவிடுவதுமில்லை” என்று (எபி 13:5) வாக்கு அளித்திருக்கிறார். சகல சிருஷ்டியையும் படைத்த தேவன் உங்களுக்கு வாக்கு அளித்திருக்கும் போது உங்கள் மனம் ஏன் பதறுகிறது... வாக்கு செய்தவர் மனிதன் அல்ல ; அவர் பொய் சொல்வதற்கு, அவர் மனுபுத்திரனும் அல்ல ; மனம் மாறுவதற்கு. அவர் தாம் சொன்னதை செய்ய நம்பிக்கைக்குரியவர். நீங்கள் நம்பிக்கையற்றவர்களாய் இருந்தாலும், தேவன் நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார். நீங்கள் கண்ட தரிசனம் சொப்பனத்திற்கு நேராக முழு மனதோடும், முழு பலத்தோடும் முன்னேறி செல்லுங்கள். அநேக ஊழியர்கள் தரிசனமில்லாமல் ஊழியம் செய்வதினால் ஊழியத்தில் முன்னேற்றம் இல்லை. தேவன் என்னை குறித்து; என்ன தரிசனம், சொப்பனம் வைத்துள்ளார் என்று தேவனுடைய ஊழிகாரர்கள் அறிய வேண்டும். அதனை அறியாதவரையிலும் காற்றில் அம்பு வீசுகிறவர்களாகதான் இருப்பீர்கள். தேவன் தன்னை எதற்காக அழைத்திருக்கிறார் என்று தேவனுடைய ஊழியர்களும், விசுவாசிகளும் தெளிவாக அறியவேண்டும். நீங்கள் அதனை அறியாத வரையிலும் ஊழியத்திலும், வாழ்க்கையிலும் வளர்ச்சியை காண முடியாது. உங்களுடைய கிரியைகள் நின்ற நிலையில் காணப்படும். அதினால் உங்களுக்கும், சமுதாயத்திற்கும் ஒரு பிரயோஜனமும் இருக்காது. ஒரே இடத்தில் நின்றுக் கொண்டிருக்கும் தண்ணீர் மற்றவர்களுக்கு உபயோகமாய் இருக்காது. அதிலிருந்து நாற்றம் வரும். அப்படியே தேவஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுடைய வாழ்க்கை நிற்கிற தண்ணீரை போல அல்ல, கடந்து செல்கின்ற நதியை போல் இருக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் பிறர்களுடைய வளர்ச்சிக்கும், ஆசீர்வாதத்திற்கும் காரணமாவார்கள்.

ஆபகூக் தீர்க்கதரிசி 2-ம் அதிகாரம் 3- வது வசனத்தில் எழுதியுள்ளார்: “தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது: முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது, அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு, அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை”. தரிசனமும், சொப்பனமும் ஏற்ற நேரத்திற்காக வைக்கப்பட்டுள்ளது, இதனை புரிந்துச் செயல்படுங்கள். அது உங்களுடைய வாழ்க்கை, குடும்பம், ஊழியம், பிள்ளைகள், கிரியை இவைகளில் நிறைவடையும் அதினால் சமுதாயம், குடும்பம், சபை, தேசம் ஆசீர்வதிக்கப்படும்.

பாரத தேசத்தின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறினார்: ‘கனவு காணுங்கள்’. அவர் ஒரு விஞ்ஞானியாக வேண்டுமென்று வாழ்க்கையில் கனவு கண்டார். அவருடைய குடும்பமோ மிகவும் எழுமையான குடும்பம். ஆனால் அவரோ அதனை தடையாக எடுத்துக்கொள்ளாமல் தன் சிறு வயதிலேயே காலையில் எழும்பி செய்தித்தாளை வீடு, வீடாக கொண்டு போய் போட்டார். அவருடைய குடும்பம் அவரை விஞ்ஞானியாக்க முடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால் அவருடைய கடின உழைப்பினால் தன் கனவை நிஜமாக்கினார். ஆகையால் ‘கனவு பாருங்கள்’ என்று கூறினார். ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் கனவு பார்க்கும் போது அவனுக்குள் உற்சாகம் வருகிறது.



அவன் வருங்காலத்தில் என்ன செய்ய வேண்டும்? என்னவாக மாறவேண்டும்? என்ற நோக்கம் கிடைக்கிறது. ஒருவனுடைய வாழ்க்கையில் கனவு இல்லையென்றால், அவன் தெரிந்துக்கொள்ளும் ஆவல் எப்படி கிடைக்கும்? கனவு கண்டால் போதாது அதன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். வேதாகமத்தில் படிக்கிறோம்: யோசேப்பு ஒரு கனவு கண்டு தன் சகோதரனிடத்தில் விவரித்தான்: “நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக் கொண்டிருந்தோம்: அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு

நிமிர்ந்திருந்தது: உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான் (ஆதி 37:6,7). அவனுடைய சொப்பனத்தைக் கேட்டதினால், அவனுடைய சகோதரர்கள் யோசேப்பை அதிகமாக வெறுத்தார்கள். யோசேப்பின் சகோதரர்கள் வாய்ப்புக் கிடைத்த போது அவனை தண்ணீரில்லாத வெறும் குழியில் போட்டார்கள். குழியிலிருந்து எடுத்து அவனை மீதியானியருடைய வியாபாரியான இஸ்மவேலருடைய கைக்கு இருபது வெள்ளிக் காசிற்கு விற்றுப் போட்டார்கள். மீதியானியர்கள் யோசேப்பை எகிப்திற்கு எடுத்துச் சென்று பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள்.

போத்திபரின் வீட்டில் யோசேப்பு அடிமையாக வேலை செய்தான். போத்திபாரின் மனைவி அவனின் மீது பொய் குற்றம்சாட்டினதினால் சிறைச்சாலையில் போடப்பட்டான். அவன் சிறையில் இருக்கும் போது எகிப்தின் ராஜாவின் பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியும் குற்றம் செய்ததின் நிமித்தம் அதே சிறையில் போடப்பட்டார்கள். ஒரே இரவில் இவர்கள் இருவரும் கனவுக் கண்டு அந்த கனவின் நிமித்தம் துக்கமாயிருந்தார்கள். அவர்களுடைய துக்கத்தைக் கண்டு யோசேப்பு அவர்களிடம் ஏன் துக்கமாக இருக்கிறீர்கள் என்று கேட்டான், அதற்கு இருவரும் தாங்கள் கனவு கண்டதாகவும், அதற்கு அர்த்தம் கூறுபவர்கள் ஒருவருமில்லை என்றார்கள் (ஆதி 40:7,8). யோசேப்பின் இடத்தில் நீங்கள் இருந்திருப்பீர்கள் என்றால் என்ன செய்திருப்பீர்கள்? நான் கனவை என் சகோதரனிடத்தில் கூறினதின் நிமித்தம் இதுவரையிலும் துன்பத்தை அனுபவிக்கிறேன் என்று நினைத்து கனவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கமாட்டீர்கள், அதற்கு அர்த்தமும் சொல்ல முன் வந்திருக்கமாட்டீர்கள்.

யோசேப்பிற்கு தேவனின் மேல் நம்பிக்கை இருந்ததினால், தேவனிடத்திலிருந்து பெற்ற தரிசனத்தின் மேல் நம்பிக்கை இருந்ததினால் ராஜாவுடைய பானபாத்திரகாரன் மற்றும் சுயம்பாகியிடம் கூறினான்: சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? (ஆதி 40:8). யோசேப்பின் பதில் தெளிவாக கூறுகிறது: அவன் தான் கண்ட சொப்பனத்தின் மீது மாத்திரமல்ல அதனை தந்த தேவனின் மேல் நம்பிக்கை வைத்திருந்தான். சொப்பனம், தரிசனம் மீது மாத்திரம் நம்பிக்கை இருந்தால் போதாது தேவன் மீது நம்பிக்கை வைத்து அதற்காக கடின உழைப்பு இருக்க வேண்டும். தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டுப் போவார்கள் (நீதி 29:18). புதிய ஏற்பாட்டில் சவுலை குறித்து பார்க்கிறோம் கர்த்தர் சவுலுக்கு தரிசனத்தைக் கொடுத்து தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்திற்கு கடினமாக உழைக்க வேண்டுமென்று கூறினார். சவுலாகிய பவுல் தரிசனத்தை பெற்றுக்கொண்டு கடினமாக உழைத்தது போல நீங்களும் நீங்கள் பெற்ற தரிசனம் நிறைவேற கடினமாக உழைக்க வேண்டும்.

சொப்பனமும் தரிசனமும் பார்த்தால் மாத்திரம் போதாது, அதற்காக கடினமாக உழைத்தால் மாத்திரம் போதாது அதனுடன் ஒழுக்கமான வாழ்க்கை முறை இருக்க வேண்டும் இல்லையென்றால் உங்களுடைய கவனம் சிதரடிக்கப்படும். உங்களுடைய கவனம் சிதரடிக்கப்பட்டால் நீங்கள் பெற்ற தரிசனத்தை நிறைவேற்ற முடியாது. உங்களுடைய சொப்பனத்தை தடைச்செய்ய கவர்ச்சி, இச்சைகள், உங்களை இழுக்க பார்க்கும். ஆனால், அதின் மேல் நீங்கள் ஜெயம் எடுத்து தரிசனத்திற்கு நேராக முன்னோக்கி செல்ல வேண்டும். யோசேப்பை போத்திபாரின் மனைவி தன்னுடைய மாயை வித்தையினாலும், ஆசை இச்சையினாலும் கவர்ந்து அவன் மீது கண் போட்டு, என்னோடே தவறாக உறவுக்கொள்ள வா என்று அவனுடைய வஸ்திரத்தை பிடித்து இழுத்தாள் ஆனால் அவனோ தன்னுடைய வஸ்திரத்தை விட்டு ஓடி, வெளியே கடந்து வந்தான் (ஆதி 39:12). அவனுடைய ஒழுக்கமான வாழ்க்கை அவன் கண்ட சொப்பனத்தை அடைவதற்கு உதவினது. உங்களுடைய சூழ்நிலையும் தரிசனம், சொப்பனத்திற்கு விரோதமாக இருந்தாலும் நீங்கள் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வீர்கள் என்றால் உங்களுடைய தரிசனத்தை அடைய முன்னேறிச் செல்வீர்கள் என்ற ஞாபகம் இருக்கவேண்டும். .

சொப்பனத்தை நிறைவேற்ற ஒழுக்கமான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு தேவன் உதவுகிறார். நீங்கள் சொப்பனத்தை கண்டு தேவன் மீது நம்பிக்கை வைத்து அதற்காக கடினமாக உழைத்து, ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வீர்கள் என்றால் தேவன் உங்களுக்கு உதவிச் செய்ய ஆயத்தமாக இருக்கிறார். தேவனுடைய உதவி இல்லாமல் நீங்கள் கண்ட சொப்பனத்தையும், பெற்ற தரிசனத்தையும் நிறைவேற்ற முடியாது. யார் ஒருவர் நோக்கத்திற்கு நேராக இச்சை அடக்கத்துடன் ஒடுகிறார்களோ? அவர்களுக்கு தேவன் உதவிச்செய்வார்.

யோசேப்பு இச்சையடக்கத்துடன் ஓடினதை தேவன் கண்டு பார்வோனிற்கு நடக்க போகின்ற

காரியங்களை குறித்து சொப்பனத்தை கொடுத்தார். ஆனால், ஒரு ஞானியாலும் மந்திரவாதிகளாலும் சொப்பனத்திற்கு அர்த்தம் கூற முடியவில்லை. அப்பொழுது யோசேப்பை சிறைசாலையிலிருந்து அழைத்து அவனிடம் பார்வோன் தான் கண்ட சொப்பனத்தை கூறினான். அதனுடைய அர்த்தத்தையோ யோசேப்பு கூறினான்: அர்த்தத்தை கூறுவதற்கு யோசேப்பிற்கு தேவன் உதவினார். அதினால் யோசேப்பு எகிப்திற்கு பிரதம மந்திரியாக்கப்பட்டான். யோசேப்பு பார்வோனுக்கு சொப்பனத்தின் அர்த்தத்தை கூறின வண்ணமாக 7 வருடம் மிகவும் செழிப்பான விளைச்சல் வந்தன அதற்கு பிறகு 7 வருடம் பஞ்சம் தொடங்கின. பூமியில் வாழ்கிறவர்கள் எகிப்திற்கு தானியம் வாங்க யோசேப்பினிடத்திற்கு வந்தார்கள். யோசேப்பின் சகோதரர்களும் தானியம் வாங்க எகிப்திற்கு வந்து யோசேப்பிற்கு முன்பாக முகங்குப்புற விழுந்தார்கள். அப்பொழுது யோசேப்பிற்கு தான் கண்ட சொப்பனம் நினைவிற்கு வந்தது (ஆதி 42: 6,9). தேவன் யோசேப்பு கண்ட சொப்பனத்தை நிறைவாக்கினார்.

இதைபோல நீங்களும் உங்கள் வாழ்க்கையை குறித்து காண்கிற சொப்பனத்தை, தரிசனத்தை நிறைவாக்க தேவன் ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் தேவனின் மேல் நம்பிக்கை வைத்து உங்களுக்கு தேவன் கொடுத்த சொப்பனம், தரிசனத்திற்காக கடினமாக உழைத்து, ஒழுக்கமாக வாழும் போது நீங்களும் தரிசனத்தை அடைய தேவன் உங்களுக்கு உதவிச்செய்வார். தேவன் தாமே நீங்கள் உங்கள் தரிசனத்தை அடைய முன்னேறிச் செல்ல உங்களுக்கு உதவிச் செய்வாராக!ஆமென்.

## கடந்த இதழின் வேத வினாப்போட்டி - 42 க்கான விடைகள்

1. விருதாவாய் - II கொரிந் 6:1.
2. அநுக்கிரக - II கொரிந் 6:2.
3. இரட்சணிய நாள் - II கொரிந் 6:2.
4. பவுல் - II கொரிந் 6:3.
5. பூமிக்குரிய வீடு, தேவனால் - II கொரிந் 5:1.
6. தீத்து - II கொரிந் 2:2.
7. உள்ளான மனுஷன் - II கொரிந் 4:16.
8. நெகேமியா - நெகேமியா 1:1,11.
9. ஒரு நரி ஏறிப்போனால் - நெகேமியா 4:3.
10. துக்கத்தையும், அழுவதையும் - நெகே 8:9.
11. பன்னிரெண்டு - நெகேமியா 7:6.
12. நெகேமியா துக்க முகமாக இருக்கமாட்டார் - நெகே 2:2.
13. பிகெமோத் - யோபு 40:17.
14. பெருங்காற்று - யோபு 38:1.
15. அத்தாலியாள் - II இராஜா 8:25,26.
16. காட்டு, நாட்டு மிருகம், பூமியில் ஊரும் - ஆதி 1:25.
17. தொளாயிரத்து முப்பது - ஆதி 5:5.
18. சகரியாவின் மகன் யோவான் - லூக் 3:2.5.
19. இருதயம் - மத்தேயு 6:21.
20. நாசரேத் - யோவான் 1:46.
21. அத்திமரம், நாத்தான்வேல் - யோவா 1:48.
22. ஸீலோவாம் - யோவான் 9:7.
23. பேர்சொல்லி - யோவான் 10:3.
24. சதுசேயர் - மத்தேயு 22:23.

ஆண்டு சந்தா
ரூ.100/-

## Our Banks Details

**Dhaya Ministries & Charitable Trust**

**State Bank of India (SBI)**
A/c.No.30916103538
IFS Code SBIN 0001515,
Branch - Purasawalkam, Chennai (T.N.)

**Or**

**Union Bank of India (UBI)**
A/c.No.527102010312844
IFS Code UBIN0552712
Branch - St. Joseph, Bhopal (M.P.)



# கூப்பிடுதலுக்கு பதில் கொடுக்கும் தேவன்! (எரே 33:3)

'ரேமா செய்தி மடல்' மூலமாக உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷமடைகிறேன்! வேதாகமத்தில் நம் தேவனுக்கு ஒரு அருமையான பெயர் உண்டு. அது தான் கூப்பிடுதலுக்கு பதில் கொடுப்பவர். ஆனால், அநேக வேளைகளில் கர்த்தர் நம்முடைய ஜெபங்களுக்கு, வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் பதில் ஏதுவும் கொடுக்காமல் அமைதியாக இருந்து விடுகிறார். அப்படியானால் நம் தேவன் நம்மை மறந்துவிட்டாரோ? என்று நம்மில் அநேகருக்கு சந்தேகம் வந்துவிடுகிறது. அப்படியல்ல பிரியமானவர்களே! தேவன் ஒரு போதும் நம்மை மறக்கிறவரல்ல, மாறாக நம்மில் ஏதோ ஒரு குறைவு இருக்கிறது, நம்மை நாம் முதலாலது சரிச்செய்யும் போது மட்டுமே, கர்த்தரும் நமக்கு பதில் கொடுக்கிவராயிருக்கிறார். வேதாகமத்தல் ஒரு முக்கியமான நபர், தன் ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுக்க வேண்டுமென்று ஐந்து காரியங்களை செய்கின்றார். அவர்தான் எலியா.

எரேமியா 33:3 ன்படி தேவன் நம்முடைய வாழ்வில் நமக்கு அறியாததும், எட்டாததுமான பெரிய காரியங்களை செய்ய வேண்டுமானால் எலியாவைப் போல நாமும் முக்கியமான 5 காரியங்களை செய்ய வேண்டும். இதை I இராஜா 18:30-39 வசனங்களின் மூலம் தெளிவாக தியானிப்போமா?.....

1. தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை சரி செய்யுங்கள்:- (I இராஜா 18:30) சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்த போது தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு இந்த சம்பவத்திலே யார் உண்மையான தெய்வமோ அந்த தெய்வம் கூப்பிடுதலுக்கு பதில் கொடுத்து பலியை அங்கிகரிக்க வேண்டுமென்பது பலிபீடத்தின் போட்டியின் முடிவு. எனவே எலியா தீர்க்கதரிசி கர்த்தர் தன் ஜெபத்தை கேட்டு தன் பலியை அங்கிகரிக்க வேண்டுமானால் தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடம் சரி செய்யப்பட வேண்டும் என்பதை நன்கு அறிந்தான். எனவே எண்ணமற்று கிடந்த கர்த்தருடைய பலி பீடத்தை முதலாவது எலியா தீர்க்கதரிசி சரி செய்தான். அதை போலவே நம்முடைய வாழ்க்கையிலும் கர்த்தருக்கும் நமக்கும் இடையே உள்ள உறவு தகர்க்கப்பட்டு, ஆதியில் தேவனிடத்திலிருந்த அன்பு குறைவுபட்டு, ஜெப வாழ்க்கையும், வேதவாசிப்பும் குறைவுப்பட்டு இருக்கிறது. அநேக வேளைகளில் கர்த்தர் வெறுக்கிற காரியங்களை நாம் நம்மை விட்டகற்றாமல் நம்மை சரி செய்யாத படி ஜென்மசுபாவமுள்ளவர்களாய் காணப்படுகின்றோம். இப்படிப்பட்ட தகர்க்கப்பட்ட பலிபீடங்கள் நமது வாழ்க்கையில் சரி செய்யப்பட வேண்டும், அப்படி சரி செய்யப்படாவிட்டால் தேவையற்ற துர் நாற்றமெடுக்கும். ஆகையால் அசுத்தமான இரகசிய பாவமென்கிற தகர்க்க வேண்டியவைகளை தகர்த்து நம் அன்றாட வாழ்க்கையில் சரி செய்ய வேண்டிய தேவனோடு உள்ள உறவை சரிபடுத்துங்கள்.

2. கற்களினால் பலி பீடத்தை கட்டுங்கள்:- (I இராஜா 18:32) இரண்டாவது எலியா செய்த காரியம் கற்களினால் பலிபீடத்தைக் கட்டினான், பலிபீடம் என்பது உடன்படிக்கைக்கும் அர்ப்பணிப்புக்கும் அடையாளமாகும். கற்கள் வேதத்தின் வாக்குத்தத்த வசனங்களுக்கு அடையாளம். வாக்குத்தத்தினை பிடித்து உரிமைப் பாராட்டி, இடைவிடாது ஜெபியுங்கள். அதுமாத்திரமல்ல ஒவ்வொரு நாள் அதிகாலை வேலையிலும் எழுந்து ஜெபித்து நம் ஒவ்வொரு அவயவங்களையும் கர்த்தருடைய பலிபீடத்தில் அர்ப்பணித்து "நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யமாட்டேன் என்று சொல்லி" கர்த்தரோடு உடன்படிக்கை செய்யுங்கள். யோபு தன் கண்களோடு உடன்படிக்கை செய்தார் அல்லவா? யோபுவின் கூப்பிடுதலுக்கு நம் தேவன் செவிகொடுத்தாரே அதுபோல நாமும் தேவனை நோக்கி "உமக்கு எல்லா சூழ்நிலையிலும் உண்மையாய் இருப்பேன்" என்று சொல்லி தீர்மானித்து உடன்படிக்கை செய்யுங்கள். பின் மாற்றமடையாதீர்கள். நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர் நூற்றுக்கு நூற்று சதவீதம் உங்களை அர்ப்பணியுங்கள்.

3. வாய்க்காலை வெட்டுங்கள்:- (I இராஜா 18:32) "வாய்க்காலை வெட்டி" வாய்க்கால் என்பது விசுவாசத்திற்கு அடையாளம். கர்த்தர் உங்கள் கூப்பிடுதலுக்கு செவிசாய்க்க வேண்டும் என்றால் உங்களுக்கு விசுவாசம் அவசியம். "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்று வேதம் கூறுகிறது. விசுவாசிக்க முடியாத சூழ்நிலைகளின் மத்தியிலும் விசுவாசியுங்கள்: "விசுவாசம்

விருத்தியடையும்படி தேவனிடம் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள்" தனிப்பட்ட, குடும்பம், பிள்ளைகள், வேலையில், பண தேவையின் மத்தியில், தேவைகளுக்கு மத்தியிலும் விசுவாசத்தை விடாதிருங்கள். அப்பொழுது உங்கள் ஜெபம் கேட்கப்படும்.

4. விறகுகளை அடுக்கி, காளைகளை துண்டித்து அதின் மேல் வையுங்கள்:- (I இராஜா 18:33) "விறகுகளை அடுக்கி, வைத்தான்" விறகு உயிரற்ற உலர்ந்து போன ஒரு மரக்கட்டை. அதைபோலவே நீங்களும் உங்களை உலர்ந்து போன மரத்தை போல தனக்கென்று எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாது, வெறுமையாக்கி தாழ்த்தி, உள்ளத்தை காளைகளை போல துண்டு துண்டாக்கி உடைத்து பலிபீடத்தின் மேல் தகனியுங்கள் (சங் 51:17). எசே 37: 2, 14, - ல் சொல்லப்பட்ட நொறுங்குண்ட ஆவியும், உலர்ந்து போன வெறுமையான நாம் தான் கர்த்தருக்கு தேவை. எனவே நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமானால் நம்மை நாமே தேவனுக்கு முன் தாழ்த்த வேண்டும் மட்டுமல்ல கர்த்தருடைய பாதத்தில் உங்களை உடைத்து ஊற்றவேண்டும்,

5. தண்ணீரை நிரப்புங்கள்:- (I இராஜா 18:35) "அப்பொழுது தண்ணீர் நிரப்பினான்" தண்ணீர் ஆவியானவருக்கு அடையாளமாம். எலியா வாய்க்காலையும், விறகுகளையும், காளைகளையும் தண்ணீரினால் நிரப்பினான். அதை போலவே நாமும் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை பரிசுத்த ஆவியானவரால் எப்பொழுதும் நிரப்பிக் கொள்வது அவசியம். ஆவியானவர் உங்களை சூழ்ந்து கொள்ளும்படி ஜெபியுங்கள். ஆவியானவருடைய ஒத்தாசையோடு பரமபிதாவை நோக்கி ஜெபியுங்கள். ரோமர் 8:26 ன்படி ஆவியானவரும் நமக்காக வேண்டுதல் செய்கிறவராயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய முழு ஆளுகையும் நம்மை சூழ்ந்து கொள்ளும் பொழுது நம்முடைய ஜெபத்திற்கு பதில் கிடைப்பது நிச்சயம்.

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே! எரே 33:3 நம் வாழ்க்கையில் பரிபூரணமாய் நிறைவேற வேண்டுமானால், நாம் தியானித்தது போல 5 காரியங்களை வாழ்க்கையில் தேவ ஒத்தாசையோடு செயல்படுத்தி அப்பியாசப்படுத்துவோம். நிச்சமாய் நம் ஜெபத்திற்கு பதில் கிடைப்பது உறுதி. ஏனெனில் நம் தேவன் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவர். அவர் உங்கள் ஜெபத்திற்கும் பதில் கொடுப்பாராக! ஆமென்.

**சகோதரி. ஸ்மைலா மகேஷ்**

## வேத வினா போட்டி – 43

**பதில் வசன எண், அதிகார எண்ணுடன் இருக்க வேண்டும்**

1. எங்கு தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாதவர்கள் உண்டு?
2. 'என் சத்தத்தைக் கேட்டு, காதவைத் திறந்தால், நான் அவனோடே போஜனம்பண்ணுவேன்' என்று எந்த சபையைக் குறித்து வேதாகமத்தில் குறிப்பிடப்படுள்ளது?
3. தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் எதனை அறுப்பான்?
4. யாருக்கு நமக்கு கிடைக்கும் சமயத்திற்குக்தக்கதாக நன்மைச்செய்யக்கடவோம்?
5. யார் இயேசுவினுடைய அச்சடையாளங்களை என் சரீரத்திலே கொண்டிருக்கிறேன் என்றார்?
6. எப்படி கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்ற முடியும்?
7. நாம் யாரைப் போல வாக்குத்தத்ததின் பிள்ளைகளாயிருக்கிறோம்?
8. ஆகார் என்பதற்கு அர்த்தம் என்ன?
9. நாம் யாருக்கு பிள்ளைகளாயிருக்கிறோம்?
10. அரபிதேசத்திற்கு புறப்பட்டுப்போய் மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பி வந்தவர் யார்?



Good Friday



Easter Service



All Night Prayer



Family counseling

Vandavasi,Thiruvanamalai Dt, (T. N.)

உபவாச கூடுகை மற்றும் ஞாயிறு ஆராதனை, மூணார் தமிழ் திருச்சபை







குடும்ப ஆலோசனை நேரம், குஜராத்





சத்தியம் T.V. உபவாச ஜெபம்.

Baptist Church, Kolathur, Chennai



Asha AG Church Bhopal (M.P.)



I.P.C. Church, Bhopal (M.P.)



Family Counseling Book Dedication, and preached at Christ Church, Bhopal (M.P.)



சத்திஷ்கார்ட் பணித்தளம்



Kanchipuram Dt,(T.N)



V.B.S - மண்ட்சூர், M.P





வெளான்விளை C.S.I திருச்சபை, தூத்துக்குடி



உடன்குடி, தூத்துக்குடி
விடுதி பிள்ளைகள்



மெஞ்ஞானபுரம் கல்லூரி பயிற்சி
ஆசிரியர்களுக்கு ஆலோசனை நேரம்



மெய்ஞானபுரம் தூத்துக்குடி
பெண்கள் விடுதி கூட்டம



வடஆத்தூர் CSI திருச்சபை
மாலை சிறப்பு கூட்டம்





CSI தூய ஆண்ட்ரு திருச்சபை,
காயல் பட்டணம், தூத்துக்குடி.



வில்லிக்குடியிருப்பு
CSI திருச்சபை,
ஞாயிறு ஆராதனை
செய்தியின் நேரம்



# காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்...

சகோதரி. ஜோஸ்பின் டேனியல்

நமது காலங்கள் தேவனுடைய கரத்தில் இருக்கிறது.... மனிதனுக்கு ஒவ்வொன்றிக்கும் தேவன் ஒவ்வொரு காலங்களை வைத்திருக்கிறார். பிறக்க ஒரு காலம் உண்டு, இறக்க ஒரு காலமுண்டு... நமது தேவன் கொல்லுகிறவரும், உயிர்ப்பிக்கிறவருமாய் இருக்கிறார் (I சாமு 2:6). ஆனாலும் அவர் இரக்கமுள்ளவராயிருக்கிறார். மனிதனுடைய நாட்களில் நடக்கின்ற யாவும், அவன் அனுபவிக்கிற காரியங்கள் எல்லாம் மாயை என்று அறிந்துக்கொள்ள வேண்டும் (பிர 1:3).

'சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன், இதோ, அவைகள் எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது' என்று சாலமன் ராஜா பிரசங்கியில் எழுதியிருக்கிறார் (பிர 1:14). "நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும் காரணம் நாட்கள் பொல்லாதவைகள் (எபேசி 5:16) என்று பவுலும் இதனை தன்னுடைய நிருபத்தில் குறித்துள்ளார்.

நாட்கள் மிகவும் வேகமாக சென்றுக் கொண்டிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் முடிவு வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறீர்கள் அல்லது அதனைக் குறித்து அக்கறையற்றும் எல்லா மனிதர்களை போல எப்படியோ வாழ்ந்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி சென்றுக் கொண்டிருந்தாலும் நாம் செய்யும் எல்லா காரியங்களையும், பேசுகிற எல்லா வார்த்தைகளையும் கர்த்தர் கவனித்து கேட்டு அவைகளை ஞாபகப் புஸ்தகத்தில் எழுதுகிறார் என்று மல்கியா தீர்க்கதரிசி புஸ்தகத்தில் 3- ம் அதிகாரம் 16-வது வசனத்தில் வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே! திருச்சபைக்கு செல்கிற மக்கள் சில சமயங்களில் நேரம் கிடைக்கும் போது சத்தியத்தையும் மற்றவர்களுக்கு போதிக்கிறார்கள்... நம்மில் சிலர் முழு நேர ஊழியர்களாகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்... இன்று தேவன் வருவார் என்றால் அல்லது மரணம் நமக்கு நேரிடும் என்றால் நமது நிலை என்னவாகும்?

மனுஷனுடைய நாட்கள் கூலிக்காரன் நாட்களைப் போலிருக்கிறது (யோபு 7:1) என்று யோபு குறிப்பிட்டுள்ளார். கூலிக்காரன் தன்னுடைய வேலை முடிந்தவுடன் அங்கு நிற்கவேமாட்டான். தன்னுடைய நேரம் முடிந்தவுடன் கூலியை பெற்றவுடனே அங்கேயிருந்து சென்றுவிடுவான் அதுபோலவே மனிதனுடைய நாட்கள் இருக்கிறது.

மனிதனுடைய நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது (யோபு 7:6). துணி நெய்கிறவன் எறிகிற நாடா மிகவும் தீவிரமாக ஓடும். அது ஒரே நிலையில் நின்று விட்டால் அதனுடைய தன்மையை அது இழந்து போய்விடும்... இது போல தான் மனிதனுடைய நாட்களும் ஓடுகிறது.

மனிதனுடைய நாட்கள் நிழலைப் போன்றது (யோபு 8:9). நிழல் ஒரு இடத்தில் நிற்பதில்லை. நிழலைப் பற்றி நாம் அதிகமாக அறிந்திருக்கிறோம். நிழல் மறைவது போல மனுஷனுடைய நாட்கள் மறைகிறது.

மனிதனுடைய நாட்கள் அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது (யோபு 9:25). அஞ்சற்காரர்கள் தாம் கொண்டு வந்த கடிதத்தை கொடுக்க வேண்டிய வீடுகளில் அல்லது நபரிடம் கொடுத்துவிட்டு, அடுத்த கடிதம் கொடுக்க உடனே அங்கு நிற்காமலேயே அங்கிருந்து கடந்துவிடுவார். அது போலவே மனிதனுடைய நாட்களும் இருக்கிறது.

மனிதனுடைய நாட்களை குறித்து சங்கீதங்களில் பார்க்கிறோம்: 1). புகையை போன்றது (சங் 102:3) 2). மனிதனுடைய நாட்கள் சாய்ந்துப்போகிற நிழலைப் போலிருக்கிறது (சங் 102:11). 3). கடந்து போகிற நிழல் (சங் 144:4) போன்றது. 4). மனிதனுடைய நாட்கள் புல்லைப் போல் உலர்ந்து போகிறது

(சங் 103:15). புல் காலையில் முளைத்து மாலையில் மறைந்துவிடும் இது போலதான் மனிதனுடைய நாட்கள் இருக்கிறது. இவ்விதமாக மறைந்து போகக்கூடிய நாட்களை மனிதன் பெற்றிருந்தாலும் தன்னுடைய நிலமையை மறந்து மற்றவர்களுக்கு விரோதமாக செயல்படுகிறதும், பேசுகிறதும் மனிதனுக்கு இயல்பாக காணப்படுகிறது.

சாலமன் ஒரு ஞானியாக இருந்தாலும், பூமியில் எந்த ராஜாவும் அனுபவிக்காத செல்வாக்குகளை அனுபவித்திருந்தாலும் அவன் புரிந்துக் கொண்டவைகளை மிகவும் எளிமையாக பிரசங்கியில் எழுதியிருக்கிறார்: "சூரியனுக்குக் கீழே நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது. நீதிஸ்தலத்தையும் கண்டேன் அங்கே அநீதி இருந்தது". நியாயஸ்தலம் என்பது மக்கள் நியாயத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு இடம், நீதிஸ்தலம் என்பது நீதியான காரியங்களை எதிர்பார்க்கின்ற இடமாகும் ஆனால் அங்கேயும் அநியாயமும், அநீதியும் இருந்தது என்று கூறிப்பிடுகிறார். ஆம், பிரியமானவர்களே! இன்றும் உலகத்தில் மாத்திரம் அல்ல நமது கிறிஸ்தவ வீடுகளுக்கும் குடும்பத்திலும், சபைக்களுக்குள்ளும் அநியாயமும், அநீதியும் நடந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நமது தேவன் வைத்திருக்கும் ஞாபக புத்தகத்தில் எல்லாம் எழுதப்படுகிறது என்பதையும் மனிதன் நினைவில் கொள்ளவேண்டும். ஏனென்றால், "சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" என்று என் உள்ளத்தில் எண்ணினேன் என்று சாலமன் பிரசங்கி 3 - ம் அதிகாரம் 17 - ம் வசனத்தில் கூறிப்பிட்டுள்ளார். உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன் (பிரசங்கி 3:12). ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் (பிரச 12:14).

பிரியமானவர்களே! நாம் என்ன செய்கின்றோமோ அவைகள் உடனுக்குடன் தேவனுடைய ஞாபகப் புத்திகத்தில் எழுதப்படுகிறது. இவைகள் ஏற்கெனவே தேவனிடத்தில் சென்றதினால் தான் வெளிப்படுதல் 22 - ம் அதிகாரம் 12 - ம் வசனத்தில் வாசிக்கிறோம்: "இதோ சீக்கிரமாய் வருகிறேன்: அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" இயேசு கிறிஸ்து வரும் போது அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் 'என்னோடேகூட' என்ற அர்த்தம் 'நம்மோடே கூட' அல்ல இதற்கும் அர்த்தம் என்னவென்றால் நாம் செய்துக் கொண்டிருக்கிறவைகள் உடனுக்குடன் தேவனிடத்தில் சென்றுவிடுகிறது. அதினால் தான் இயேசு கிறிஸ்து வரும் போது அவருடன் நமது கிரியைக்களுக்குரிய பலனும் வருகிறது. ஆகையால் நாம் எங்கு நிற்கிறோம்? என்ன செய்கிறோம்? எதற்காக வாழ்கிறோம்? என்று நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவனுக்குரியவர்களாய் வாழ்வோம் என்றால் அதாவது "உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்" (பிரசங்கி 3:12) என்று பிரசங்கி அறிந்துக் கொண்டது போல நீங்களும் நன்மை செய்வீர்கள் என்றால் அல்லது தேவனுக்கு பயந்து வாழ்வீர்கள் என்றால் ஒவ்வொரு கிரியையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வரும் போது (பிரச 12:14) உங்களுக்குரிய பலனை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். ஆதலால் ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக் 4:17).

ஒவ்வொரு மனுஷனுக்கும் உங்களுடைய உள்ளான வாழ்க்கையை குறித்து நன்றாக தெரிந்திருக்கும். ஆனாலும் அதனையும் அறியாமல் நானும் தேவனுக்கு பிரியமாய் தான் வாழ்கிறேன் என்று சொல்லி உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்வீர்கள் என்றால் இயேசு கிறிஸ்துவுடன் வரும் உங்கள் பலனும், பங்கும் நிச்சயமாகவே பரிதபிக்கக்கூடியதாய் இருக்கும். இதனை படிக்கின்ற பிரியமானவர்களே! நீங்கள் நிச்சயமாக உங்களை ஆராய்ந்துப் பாருங்கள் ஏன் என்றால் எதோ பூமியில் வந்தேன் அல்லது சென்ற பிறகு ஒன்றுமில்லை என்று நினைக்க வேண்டாம்.... இதுவே தேவன் நமக்கு கொடுக்கும் தருணமாகும். உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள் நிச்சயம் வேதம் சத்தியம்! நிச்சயம் இயேசு கிறிஸ்து வரபோகிறார் அல்லது அவர் வருவதற்கு முன் நம்முடைய காலங்கள் முடிவடைந்தாலும்... நமது கிரியைகளுக்கேற்ற பலன் உண்டு. எல்லாவற்றையும் தேவன் நியாயத்திற்கு கொண்டு வருவார்.

என்னுடைய இளம்வாலிப வயதில் என்னை அதிகமாக கவர்ந்த பாடலுடைய வரிகளை

உங்கள் முன் கொண்டு வர விரும்புகிறேன்......

ஜீவியமே ஒரே ஜீவியமே
அண்ட சராசரம் அனைத்திலுமே
மேவி வசிக்கும் மனிதர் அனைவரும்
பூமியில் வாழ்வது ஒரே தரமே


1.பிறப்பதும் இறப்பதும் தெய்வச் செயல்
இடையில் இருப்பது வாழ்க்கையாகும்
இயேசுவில் சார்வதால் பரிசுத்தம் காணும்
பரிசுத்தர் ஆட்சியில் சாட்சி கூறும்
இதைவிடில் முடிவது வீழ்ச்சியாகும்..... ஜீவியமே


2. எண்ணிப்பார் கழித்திட்டக் காலமதை
கதையைப்போல் மனிதரின் நாட்கள் செல்லும்
உலகத்து சேவை சாகையில் ஓயும்
உன்னுடன் மரித்தபின் வருவதேது?
கிறிஸ்துவின் சேவையே நிலைத்து நிற்கும்.... ஜீவியமே

மேலே உள்ள பாடல் வரிகள் அனைத்தும் நாம் இப்பொழுது படித்த செய்தியின் சாரங்கள் ஆகும். இதனை எழுதிய தேவ மனிதன் மிகவும் அருமையாக எழுதியுள்ளார்.

பிரியமானவர்களே! நாட்கள் பொல்லாதவைகளாய் இருப்பதினால் அதனை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். தேவன் தாமே உங்கள் நாட்களை எண்ணும் அறிவையும், அதனை பிரயோஜனப்படுத்திக் கொள்ள கிருபையும் தருவாராக!ஆமென்.

1. **அலுவலக மற்றும் புத்தக வேலைகளுக்காக தேவைப்படும் Computer மற்றும் Printer தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.**
2. **அலுவலக பணிக்கென்று தேவைப்படும் அருட்பணிப்புள்ள நபர்களுக்காக ஜெபியுங்கள்.**







## கிறிஸ்மஸ் நிகழ்ச்சியின் தேவைகள் மற்றும் ஜெபக்குறிப்பு:

1. **கிறிஸ்மஸ் தேவைகள் Rs. 3,75,000/- சந்திக்கப்பட ஜெபியுங்கள்.**
2. **அனைத்து பணித்தளங்களிலும் நிகழ்ச்சிகள் தடையின்றி நடைப்பெற ஜெபியுங்கள்.**
3. **14 அருட்பணியாளர்களுடைய கிறிஸ்மஸ் வெகுமதியின் தேவைகள் Rs. 35,000/- சந்திக்கப்பட ஜெபியுங்கள்.**
4. **அருட்ணியாளர்களுக்கும் மற்றும் முன்னின்று நடத்துக்கின்ற அனைவருக்கும் நல்ல பாதுகாப்பும், சுகமும் கிடைக்க ஜெபியுங்கள்.**
5. **தேவைகளை சந்திக்க தேவன் உதவியாளர்களை எழுப்பி தர ஜெபியுங்கள்.**

# பணித்தளச் செய்திகள்........



## துதியுங்கள் :

1. மோதிலால், தமேஷ்ஷர் - இவர்கள் அருட்பணியாளருக்கு விரோதமாக செயல்பட்டுக்கொண்டிருந்தார்கள், தேவனுடைய கிருபையினால் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.
2. மீனுபாயின் குழந்தைக்கு சுகம் கிடைத்ததினால் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள்.
3. சரஸ்பதி, அனிதா - இவர்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தில் வளந்து வருகிறார்கள்.
4. பீஹாவான் - புதியதாக நமது கூட்டத்திற்கு வந்ததினால், தேவனுடைய அன்பை அறிந்துக்கொண்டார்.
5. அசுத்தாவியின் தாக்கத்தினால் மனநிலை பாதிக்கப்பட்டிருந்த நீலேஷ் ஜெபித்த போது, தேவனுடைய கிருபையினால் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலையாகி மனநிலை சரியாக்கப்பட்டார்.
6. சுரேஷ் - சுவிசேஷம் கேட்டதினால் வாழ்க்கையில் மாற்றம் வந்தது, ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக இருக்கிறார்.
7. சுக்வனி - சிறுநீரகம் கழியும் பாதையில் அநேக நாட்களாய் இருந்த பெலவீனம் சுகமானது.
8. மஹேஷ் பான்டே - அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டார்.
9. ராணிபாய் - மூன்று வருடமாக இருந்த இடுப்பு வலியிலிருந்து சுகம் பெற்றார்.
10. ப்புல்மத்துபாய் - வயிற்றில் மரித்த குழந்தை ஜெபித்த போது தாயிற்கு எந்த பிரச்சனையும் இல்லாமல் தானாகவே வெளியே வந்தது.
11. பணித்தளங்களில் தடையின்றி அருட்பணி நடைப்பெற்றதற்காக.
12. புதிய பகுதிகளில், புதிய திருச்சபைகளில் தேவன் கொண்டு சென்று பயன்படுத்தினார்.
13. ஊழியங்களின் சகல தேவைகளையும் தேவன் சந்தித்தார்.
14. தேவன் தம்முடைய வல்லமையினாலும், அதிகாரத்தினாலும் எங்களை உபயோகப்படுத்தினார்.
15. பிரயாணத்தில் தேவன் தந்த சமாதானம், பாதுகாப்பு மற்றும் சுகத்திற்காகவும்.

## ஜெபக்குறிப்புகள் :



1. *ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள காத்திருக்கும் 15 நபர்களுக்காக.*
2. *நாகேஷர், அம்ரிஹா - முழங்காலில் இருக்கும் வலியிலிருந்து சுகம் பெற.*
3. *கோமல், அஞ்சு - இவர்களுடைய வயிற்றில் தொடர்ந்து வாயு உண்டாகிறது இதிலிருந்து சுகம் பெற.*
4. *மூணா, அனு - இவர்களுக்கு தொடந்து காணப்படும் தலை வலியிலிருந்து சுகம் பெற.*
5. *மம்தா - ஏற்ற துணை கிடைக்க.*
6. *புவினிஷ் - தொண்டையிலுள்ள பிரச்சனை நீங்க.*
7. *தைசீர் - மருத்துவம் பார்த்தும் சிறுநீரக கோலாறு சுகமாகவில்லை.*
8. *ச்சாந்த்பர்னா - முதுகு தண்டில் பெலவீனம் ஏற்பட்டதினால் எழுந்து நடக்க முடியாமல் இருக்கும் இவர்கள் எழுந்து நன்றாக நடக்க.*
9. *பாம்கட் தொகுதியிலுள்ள அதிகாரிகள் மக்களுக்கு உதவியாக இருக்க.*
10. *சத்னாமீ கிராமத்திலுள்ள தலைவர் தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக செயல்பட்டு*

மிகவும் கிறஸ்தவர்களை துன்பப்படுத்துகிறார், இவருடைய மனமாற்றத்திற்காக.

11. பங்குபீ - முறிந்த கால் எலும்பு சிக்கிரத்தில் சுகமாக. கீதா இடுப்பு வலியிலிருந்து சுகம் பெற
12. இதுவரையிலும் பேசாமல் இருக்கும் ஐந்து வயது சோம் நன்றாக பேச.
13. சுபாஷ் இரண்டு கால்களிலுள்ள வேதனை, ஜலக் - இவருக்கு மூளை வேலை செய்யவில்லை, ராலால் யாதவ், கிரிஜா - பக்வாதம் - இவர்களுடைய சுகத்திற்காக.
14. ராமு, விஸ்வாஷ் பன்ஜாரே - தொடர்ந்து காணப்படும் காது வலியிருந்து சுகம் பெற.
15. ர.்.பின் - மூன்று மாதமாக தொடர்ந்து வயிற்றிலுள்ள வேதனையில் இருந்து சுகம் பெற.
16. ஜெயஸ்ரீக்கு 4 சிறுபிள்ளைகள், இத்துவாருக்கு 2 சிறு பிள்ளைகள் - இருவருக்கும் கணவன் இறந்ததினால் பிள்ளைகளை வளர்க்க போதுமான வருமானம் கிடைக்க. ரோகோபதி - மிகவும் ஏழ்மையான குடும்பம், இவருடைய பிள்ளைகள் தகப்பனுக்கு கீழ்ப்படிந்து வாழ.
17. பொன்னு/தினா - குழந்தை பாக்கியம் கிடைக்க.
18. ஜோஸ் சகோரி - திருமணத்திற்காக காத்திருக்கிற இவர்களுக்கு ஏற்ற துணை கிடைக்க.
19. தினேஷ் வைஷ்னோ - முழு குடும்பமும் இரட்சிக்கப்பட.
20. ஈராலால் யாதவ், கிரிஜா - பக்வாத வியாதிலிருந்து சுகம் பெற.
21. அனுலத்தா - இழுப்பு வியாதிலிருந்து சுகம் பெற.
22. அமன் - சிறுநீரக பையிலுள்ள கல் வேதனையிலிருந்து சுகம் பெற.
23. ஹாரிஷ் - இரவில் தூங்கும் போது சாத்தான் தாக்கின அடையாளங்கள் கிரலாக சரீரத்தில் ஏற்படுகிறது இதிலிருந்து சுகம் கிடைக்க.
24. விசுவாஷ் சரீரத்தில் உள்ள அரிப்பிலிருந்து சுகம் பெற.
25. கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை துன்பப்படுத்துகிற மேவு கிராமத்திலுள்ள தலைவர்களான சஹேத்தார்குரே, கர்மீத் குரோ, துளார் குரே, நரேந்தர் குரே, சுக்தேவ் குரே, கிரன் டன்டன், இஸ்வினி பன்ஜாரே, சுரேஷ், சுராங்கி, கேதார், பியாரேலால் டன்டன் இவர்கள் தேவனுடைய அன்பை அறிந்துக் கொள்ள.
26. ரமாயன் பாய் ஒரு வருடமாக வியாதியினால் வேதனைப்படுகிறார் இவர்களின் சுகத்திற்காக.
27. பதரின், ஈராவ்தி - இவர்களுடைய கணவன்மார்கள் குடியிலிருந்து விடுதலைப் பெற. லீலா - விசுவாசத்தில் வளர
28. திமதிபிளா, சுலைமான் - பாதுகாப்பு, பரிசுத்தம், அமைதியான மனமும், வேலையும் கிடைக்க.
29. மக்களுக்கு போக்குவரத்துக்கு வழிவிடாமல் அரசின் இடத்தை பிடித்துக் கொண்டு மற்றவர்களுக்கு மிகவும் வேதனை தரும் சியாம்லால் ச்சாவு மனம் திரும்ப.
30. மீட்டாய் - பாதுகாப்பு, சுகம் மற்றும் பரிசுத்த வாழ்க்கை.
31. மேவு பாட்டா, கரே காவ்ங், மேயின்குடா - இந்த பகுதிகளில் ஆலயம் கட்டப்பட.
32. பணித்தளங்களில் விரோதமாக செயல்படுகிறவர்கள் தேவனுடைய அன்பை அறிந்துக் கொள்ள.
33. எங்களுடைய ஊழிய பயணத்தில் தேவன் நல்ல சுகம், பாதுகாப்பு, சமாதானம் கொடுக்க.
34. ஊழியங்களின் அனைத்து தேவைகளும் சந்திக்கப்பட.
35. ஊழியங்களுக்காக உதவி செய்ய, ஜெபிக்க தேவனுடைய பிள்ளைகளை தேவன் எழுப்பி தர.
36. ஊழியங்களுக்கு ஜெபிக்கின்ற, உதவி செய்கின்ற தேவனுடைய பிள்ளைகளின் தேவைகள் சந்திக்கப்பட.
37. அருட்பணிப்புள்ள அருட்பணியாளர்கள் எங்களுடன் இணைந்து செயல்பட.

## ஜெபக்குறிப்புகள்

1. நமது தேசத்தில் பாதுகாப்பு, சமாதானம் உண்டாக.
2. மாநிலங்களில் நடைப்பெறவிருக்கம் தேர்தலுக்காக.
3. சீதோஷண நிலையினாலே பாதிப்பு வராமலிருக்க.
4. பரவி வரும் கொள்ளை நோயிலிருந்து மக்கள் பாதுக்கப்பட.
5. சிறுவர்கள் மற்றும் வாலிபர்களின் - பரிசுத்த வாழ்க்கை, பாதுகாப்பிற்காக.
6. மூட நம்பிக்கை நம் தேசத்தைவிட்டு விலக.
7. தேசத்தின் பொருளாதார நிலைமையில் மாற்றங்கள் வர.
8. பெண்கள் நடிவில் எழுப்புதல் வர அவர்களின் பாதுகாப்பிற்காக.
9. நம் தேசத்தில் வேலையில்லா பற்றாக்குறை மாற.
10. நம் தேசத்தில் காணப்படும் ஊழல்கள் வேரோடு அழிக்கப்பட.
11. அரசு அதிகாரிகள் மக்களுக்கு செய்ய வேண்டிய நன்மையான காரியங்களை தடையின்றி செய்ய.
12. முப்படை வீரர்களின் பாதுகாப்பிற்காக.

## "தயா ஊழியங்கள்"

- அருட்பணியாளர் அனுப்புதல்
- உபவாச ஜெபக்கூட்டங்கள்
- சுவிசேஷ கூட்டங்கள்
- எழுப்புதல் கூட்டங்கள்
- குருகுலம்
- வேதபாட ஊழியங்கள்
- சிறுவர் ஊழியங்கள்
- வாலிபர் ஊழியங்கள்
- பத்திரிகைகள்
- ஊழியர் புத்துணர்ச்சி ஊழியம்
- குடும்ப ஆலோசனைகள்
- ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி
- ஏழைகள் கைவினைப் பயிற்சி
- சுகாதாரம் மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகள்

**Printed Matter**

**To**

Return Requested to:
**Post Box No. 01**
**Dhaya Ministries**
Address : T8/510, Sagar lake view
Homes, Ayodhya Bye pass Road, Piplani
Post , Bhopal (M.P.) 462022

"கர்த்தர் ஞானமுள்ள தேவன், அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ?" - I சாமு 2:3.